2006 ஜனவரி 17]

பெண்கள் அறுவை சிகிச்சை செய்துகொள்வதாக எடுத்துக் கொண்டால், பயனாளிகளுக்கு ரூ.85/–ம், சாப்பாட்டிற்கு ரூ.35/–ம், போக்குவரத்திற்கு ரூ.20/–ம், அதுபோக, மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.15/–ம், ஆக மொத்தம் ரூ.155/– ஆக இருந்தது. இப்போது அதை 1–6–2001–ல் உயர்த்தி, பயனாளிகளுக்கு ரூ.200/–ம், மருந்துக்கு ரூ.90/–ம், இதர வகைக்காக ரூ.10/–ம், ஆக மொத்தம் ரூ.300/– ஆகக் கொடுக்கப்படுகிறது. அதேபோல, அந்த அறுவை சிகிச்சையிலே, பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவருக்கு ரூ.5/–ம், மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவருக்கு ரூ.3/–ம், மருத்துவம் சாராப் பணியாளருக்கு ரூ.2/–ம், மருந்துக்கு ரூ.40/–ம், இதர வகையான செலவுகளுக்கு ரூ.10/–ம், அதேபோல, மாநில அரசின் சார்பாக, பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்களுக்கு ரூ.5/–ம், மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவருக்கு ரூ.1/–ம், மருத்துவம் சாராப் பணியாளருக்கு ரூ.3/–ம், நிர்வாகப் பணியாளருக்கு ரூ.2/–ம், உதவி மருத்துவருக்கு ரூ.4/–ம், ஆக மொத்தம் ரூ.300/– வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது மத்திய அரசினுடைய வரையறைத் திட்டம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

9—

ஊட்டி டீ

*** 29766—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், குன்னூர் INDCOSERVE மூலம் தயாரிக்கப்படும் ஊட்டி “டீ” தரம் உயர்த்தப்படுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வரும் INDCOSERVE என்ற தொழில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் இணையம், குறைந்த விலையில் தரமான தேயிலைத் தூளைப் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள், 28–8–2001 அன்று புதிய தேயிலைத் தூளை அறிமுகம்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2006 ஜனவரி 17

செய்து, ஊட்டி டீ என்று பெயரிட்டு, தரமான தூளை விநியோகம் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு, இப்போது விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த ஊட்டி டீ விற்பனை செய்யப்படுவதற்குமுன், தரமுள்ளதா என்று, நிறம், மணம், சுவை உள்ளதா என்று, பகுப்பாய்வு சோதனைக் கூடத்தில், இரசாயன சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே விற்பனை செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலுள்ள தேயிலையை பெரிய தனியார் கம்பெனிகள் விலைக்கு வாங்கி, இலாபம் சம்பாதிக்கின்ற வகையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள். அதேபோல, INDCOSERVE மூலம் தயாரிக்கப்படும் ஊட்டி டீ-யை ஏற்றுமதி செய்ய அரசுக்கு யோசனை இருக்கிறதா, அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்போல, INDCOSERVE நிறுவனத்துடன் வெளிநாட்டில் விற்பனை செய்வதற்கு யாராவது வந்து ஒப்பந்தம் செய்வார்களேயானால், அரசு கண்டிப்பாக ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி டீ தமிழகத்திலேயுள்ள நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. இப்பொழுது அந்த டீ-யைப் பொது மக்கள் விரும்பி வாங்குகின்றார்கள். ஆனால் நியாய விலைக் கடைகளில் பெரும்பாலும் ஊட்டி டீ-யைக் கேட்டால், இல்லை என்று சொல்கின்றார்கள். எனவே, நியாய விலைக் கடைகளில் தட்டுப்பாடு இல்லாமல் ஊட்டி டீ-யை விற்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் தந்துகொண்டிருக்கின்றார். ஊட்டி டீ எவ்வளவு தேவை என்று அந்தந்த மாவட்டக் கூட்டுறவுத் துறை அதிகாரிகள்மூலமாக indent பெறப்பட்டு, அதன் அடிப்படையிலேதான் தயார் செய்து,

2006 ஜனவரி 17]

அவரவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இல்லையென்கின்ற தகவல் இதுவரை அரசின் கவனத்திற்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, INDCOSERVE மூலம் வாங்கப்படும் ஊட்டி டீ-யினுடைய தரம் குறித்து, இப்பொழுது மாவட்டத்திலுள்ள சிறு, குறு விவசாயிகள் தரம் உள்ள தேயிலையை, பசுந்தேயிலையை கூட்டுறவுத் தொழிற்சாலைகளுக்குத் தருவதனால், மற்ற மாநிலங்களிலிருந்து தேயிலைத் தூள் வாங்கி, அத்துடன் ஊட்டி தேயிலைத் தூளைச் சேர்த்து விற்பதைக் காட்டிலும் மாவட்டத்திலுள்ள INDCOSERVE மூலமாக, கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின்மூலமாக நல்ல தரமுள்ள தேயிலைத் தூள் இருப்பதால், அவற்றை வாங்கி விற்பதன்மூலமாக செலவுத் தொகை குறைவாக இருக்கும். இதை நமது அரசு நடைமுறையில் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, வெளிமாநிலங்களிலிருந்து வாங்கக்கூடிய டீ தூள் அளவை இப்பொழுது குறைத்து, அதற்குப் பதிலாக தரமுள்ள டீ நம்முடைய மாநிலத்திலேயே, ஊட்டியிலேயே பெறவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டு, அசாம் டீ 25 விழுக்காடு, எஸ்டேட் டீ 25 விழுக்காடு, தனியார் டீ 2 முதல் 3 விழுக்காடு, INDCO டீ 35 முதல் 38 விழுக்காடு, டான் டீ 18 விழுக்காடு, இந்த அளவிலே கலப்பினம் செய்து, அதற்குப் பிறகு INDCOSERVE நிறுவனத்தால் இன்றைக்குத் தரமுள்ள தேயிலைத் தூள் விற்பனை செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. கார்த்தி.

திரு. மு. கார்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டியிலே கிடைப்பதைப்போல, சேலம் மாவட்டம் ஏற்காடு பகுதியிலே, இன்றைக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு மிகத் தரமான காபிக் கொட்டை அங்கே கிடைக்கின்றது. ஆகவே, அரசு அதைக் கொள்முதல் செய்து, அங்கே தொழிற்சாலை அமைத்தால், அந்த மக்களுக்கு மிகவும் ஏற்றதாக இருக்கும். அரசு இதைப் பரிசீலனை செய்து, ஏற்காட்டிலே காபி ஏற்றுமதி

செய்யக்கூடிய நல்ல வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே, அந்த ஊரகத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் அங்கு தொழிற்சாலை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் புதிய தொழிற்சாலை உருவாவதற்கு வேண்டிய வழிமுறைகளை வகுத்துத் தந்து, அதன்மூலம் ஊரகப் பகுதிகளில் தொழிலைப் பெருக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த முயற்சியை, ஏற்காடு பகுதியிலே இருக்கக்கூடிய காபி வியாபாரிகள், இந்தப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் செய்ய முன்வருவார்களேயானால் அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. ப. அரசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

10—

சோப்பு தொழிற்சாலை

***46100—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி நகரில் கதர் வாரியம்மூலம் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

முற்பகல் 10-50

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள், "வேலையற்றோர் நெஞ்சிலே விபரீத எண்ணங்கள்" என்று. ஒரு அரசு வேலைவாய்ப்பை உருவாக்குவது என்பது மிக முக்கியமான கடமைகளிலே ஒன்றாகும். அந்த வகையில், வேலைவாய்ப்பை மணமேல்குடி பகுதியிலே